1971 ஜூன் 21]

யோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. பஞ்சாபிலே எப்படி நடைபெறுகிறது என்பதை ஆராய்ந்து முதலமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். "ஃபாக்டரி ஆக்ட்ஸ், லேபர் லெஜிஸ்லேஷன்" இவற்றையெல்லாம் இலகுவாக ஆக்கினால் ஏராளமான தொழிற்சாலைகள் அமைக்கப்பட முடியும் என்று கருதப்படுகிறது. கனம் அங்கத்தினர் தொழிற்சங்கத் தலைவர், அப்படிப்பட்ட சட்டம் வரும்போது ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : ஏராளமான சிறு தொழில்கள் ஏற்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். புள்ளி விவரத்தைக் கணக்கிடும்போது மூலப்பொருள் விநியோகத்தைக் கொண்டு மட்டும் கணக்கிடாமல் அந்த மூலப்பொருளை வாங்கித் தொழிற்சாலை தொடங்கினவர்கள் கணக்கையும் உற்பத்திப் பெருக்கத்தையும் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் உற்பத்தி மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை எவ்வளவு, எந்த அளவை வைத்துப் புள்ளி விவரம் கணக்கிடப்படுகிறது என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு வாரியம் இருபற்றி ஆராய அமைக்கப்பட்டது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றவுடன் இத்தகைய தவறுகள் நடக்காமல் தடுக்கவேண்டுமென்று ஒரு விசாரணை நடந்தப்பட்டது. யார் யார் தவறு செய்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, சிறு தொழில்களுக்கு மின்சாரம் போன்ற வசதிகள் அளிப்பதிலே அரசாங்கம் ஏதாவது சலுகை தரமுடியுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என்னென்ன சலுகை என்பது தான் பிரச்சினையாக இருக்கிறது . . .

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன்

10 **வின.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் தமிழ்நாடு அரசுக்கு எந்த அளவுக்கு நிர்வாக அதிகாரம் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திட்டம் நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட் என்ற மத்திய அரசாங்கத்தின் முழு அதிகாரத்துக்குட்பட்ட நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளது. அதன் இயக்குனர் குழுவில் தமிழ்நாட்டு அரசின் இரு பிரதிநிதிகளாக நிதி, தொழில் துறைகளின் காரியதரிசிகள் அங்கம் வகிக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் நிர்வாகத்தில், அதிகாரத்தில், நமது தமிழக அரசுக்குள்ள பங்கு என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அது ஒரு கார்ப்பொரேஷனாக நடத்தப்படுகிறது. நம்முடைய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலும் செயல்படுகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து இரண்டு முக்கியமான பொருள்கள் சப்ளை செய்யப்படுகின்றன. ஒன்று லீகோ, இரண்டு மின்சாரம். லீகோ, உற்பத்தி குறைகிறது, விலை கூடுகிறது. உற்பத்தியை அதிகரிப்பதற்கும் விலையைக் குறைப்பதற்கும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட்டது. இதன் மூலமாக ஏராளமாக லிக்னைட் கிடைக்கவேண்டும். அதற்கு நம்முடைய அரசு வற்புறுத்தி வருகிறது. சேலம் உருக்காலையை மத்திய அரசு அனுமதித்திருப்பதால் இந்த இரண்டாவது கட்ட வேலையையும் அனுமதிப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, நெய்வேலித் திட்டத்தில் இரண்டாவது சுரங்கம் ஒன்று ஆரம்பிக்க நமது சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் முதலில் பதில் சொல்லியிருக்கிறேன். சேலம் உருக்காலை வருவதால் இரண்டாவது சுரங்கம் தேவையா என்ற ஆராய்ச்சி செய்யப்பட்டது. சேலம் உருக்காலையை மத்திய அரசு அனுமதித்து விட்டால் இந்த இரண்டாவது சுரங்கமும் செயல்படும்.

திரு. சொ. காவேரிமணியம் : இரண்டாவது 'மைன்' கட்டம் வருகின்ற நேரத்தில் அதிலே பணிபுரிந்த வல்லுநர்கள், குறிப்பாக பொறியியல் வல்லுநர்களுக்கு வேலை பாதுகாப்பு அளிக்கப்படுமாவென அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டாவது கட்டத்தில் ஏராளமான பேருக்கு வேலை கிடைக்கும்.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பரேஷன் இப்படி இருந்தாலும், சேலம் இரும்பாலை வரும் போது, அங்கே அருகின்ற கார்ப்பரேஷன் நம்முடைய தமிழ் நாடு அரசாங்கம் அதிக பொறுப்பு வகிக்கின்ற அளவுக்கு நமக்கு அதிகாரங்கள் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்காரிடம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். மத்திய சர்க்காரும் இதில் கவனம் செலுத்தும் என்று கருதுகிறேன்.

1971 ஜூன் 21]

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத் தொழில் நிறுவனங்களில் உள்ளூர்வாசிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை, வெளி மாநிலத்துக்காரர்களுக்கே வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இந்துல்தான் கச்சா பிலிப் போன்ற தொழில் நிறுவனங்களில் இது போல் நடைபெறுகிறது. இக்குறையை நீக்க அரசு ஏதாவது வழி செய்யமுடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படிப்பட்ட குறைபாடு சொல்லப்படுவது உண்மைதான், ஊட்டியில் மட்டுமல்ல, நம்முடைய சென்னையில் 'மெட்ராஸ் ரிபைனரீஸ்'-ல் கூட தமிழ் நாட்டவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சருக்கு இது போன்ற நிலை இருக்கக்கூடாது, தமிழ் நாட்டில் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளில் தமிழ்நாட்டவர்களுக்கு அதிகச் சலுகை கொடுக்கவேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்கள். அரசாங்கத்தில் பொறுப்பு வகிப்பவர்கள்கூட நம்முடைய மாநிலம் புறக்கணிக்கப் படுகிறது என்ற குறையைச் சொல்லுகிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தமிழகத்திலே உள்ள நெய்வேலி நிலக்கரிசுரங்கத்திலே மொத்தமாகக் கிடைக்கும் வருமானத்திலே தமிழக அரசுக்கு பங்கு அளிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட ஒரு குறிப்பு என்னிடத்திலே இருக்கிறது. நாம் முதன் முதலிலே செலவழித்த தொகைக்கு 4½ சத விகிதம் வட்டி கொடுப்பது, பின்னாலே வருகிற 'நெட் பிராபிட்' லே 'டெப்ரிஸியேஷன்' 'அமர்ட்டைசேஷன்' இவைகளை எல்லாம் கழித்ததற்குப் பிறகு மீதமிருக்கின்ற தொகையிலே நமக்கு 25 சத விகிதம் கொடுக்கப்படுவதாக இருக்க வேண்டும் என்பது தான். அதைப் பற்றி உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால், சரியான விளக்கம் கொடுக்கப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, will the Hon. Minister for Industries be pleased to state that if the policy of oppointing local people in such factories is followed to its logical conclusion, will it not affect the Tamilians employed in large numbers in Jamshedpur in the Bihar State and other places?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படிப்பட்டவர்களும் தமிழ் நாட்டிலே இருக்கிறார்கள் என்று அறியும்போது வருத்தமாக இருக்கிறது. இதை மத்திய அரசாங்கம் தெரிந்து கொண்டுவிடும் என்ற அச்சமும் எங்களிடத்திலே இருக்கிறது. இதே குறையைத் தமிழகத்திலே சொல்லுவதைப்போல் மற்ற மாநிலத்திலே உள்ளவர்களும் குறிப்பிட்டு வருகிறார்கள். நான் முன்னாலே சொன்னதைப் போல் தமிழ் நாட்டிலேதான் இது இருக்கவேண்டும் என்று வலியுறுத்தி எழுதவில்லை. தமிழ் நாட்டிலே அதிக வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று எழுதுவது நம்முடைய

உரிமை ஆகும். இந்த உரிமையைக் கேட்கக் கூடாது என்று உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால், இந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் தொடங்குகின்ற தொழில் பெரும் தொழிலாக இருந்தாலும், அதை மாநில அரசு மேற்கொள்வதாக இருந்தாலும், உற்பத்தித் துறையிலே பங்கு ஏற்றுப் பணி புரிவதற்கு இந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு நல்ல முறையிலே வாய்ப்பு இருக்க வேண்டும். இப்படி நல்ல முறையிலே பணியாற்ற நம் மக்களுக்கு வாய்ப்பு ஏற்படுவதற்கு மாநில அரசு மத்திய அரசாங்கத்தின் சம்மதத்தைப் பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அகில இந்திய கட்சியைச் சேர்ந்த ஒருவர் இந்த அருமையான கருத்தைச் சொன்னதற்காகப் பாராட்டுகிறேன். எங்கள் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதைத் தான் வலியுறுத்தி வருகிறோம். மற்ற ஊர்க்காரருடன், இதிலே பொறுப்புள்ளவர்கள் பலரையும் போட வேண்டும் என்று முயற்சித்துக் கொண்டு வருகிறோம். அதுவும் நம்முடைய அமைச்சர் சேலத்துக்காரராக இருப்பதால் இதை ஒரு பெரிய பிரச்சினையாக எழுப்பக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின்படி கேள்வி எண்கள் 11, 12 தள்ளிப் போடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை

13. வினா. திரு. சு. துரைசாமி
திரு. கே. எ. வகாப்
திரு. கே. டி. கே. தங்கமணி
டாக்டர் எச். வி. ஹாண்டே

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசாங்க பஸ் சர்வீசுக்குத் தனி போர்டு அமைக்க உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ர. இராமச்சந்திரன்:

(அ) ஆம்.

(இ) தனி போர்டு அமைப்பது பற்றிய சாதக பாதகங்களை அரசு பரிசீலனை செய்து வருகிறது.